## முக்கிய  தகவல்கள்

- ஒரு ஆரம்பப் பாடசாலையில் அல்லது உயர் நிலைப்பாடசாலையில் உங்கள் குழந்தையை சேர்த்துக் கொள்ள ஒரு தடுப்பு மருந்தளிப்புச் சான்றிதழை வழங்கவும், அது ஒன்றில்: ஒரு **AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையாகவோ** (இது நடப்பு நாள் வரைக்குமான தடுப்பு மருந்துகளைப் பெற்றுள்ள பிள்ளை, நடப்பு நாள் வரைக்குமான தடுப்பு மருந்துகளைப் பெற்றிராத பிள்ளை, அல்லது மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பு மருந்தளிக்கப்பட முடியாத அல்லது இயற்கையான தடுப்பாற்றல் உள்ள பிள்ளைக்கானது) **அல்லது** ஒரு **AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு பத்திரமாகவோ** (இது அங்கீகரிக்கப்பட்ட தவறவிட்ட தடுப்புமருந்துகளைப் பெறுவதற்கான அட்டவணைத் திட்டமொன்றில் உள்ள பிள்ளைக்கானது) இருத்தல் வேண்டும்.
- சேர்வின்போது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்தளிப்பு சான்றிதழ் **வழங்கப்படா**திருந்தாலும், மாணவர்கள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட முடியும்; ஆயினும், பாடசாலையின் நோய்த்தடுப்பு பதிவேட்டில் அவர்கள் நோய்த்தடுப்பு மருந்து பெறாதவர்கள் எனக் குறிப்பிடப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்தளிப்பு சான்றிதழ் இல்லாத மாணவர்கள் மற்றும் தடுத்து மருந்தேற்றப்படாதவர்கள், தடுப்பு மருந்தளிப்பினால் தவிக்கப்படக் கூடிய நோயொன்று பாடசாலையில் திடீரெனப் பரவுமாயின் **அல்லது** தடுப்பு மருந்தளிப்பினால் தவிக்கப்படக் கூடிய நோயொன்று உள்ள ஒருவருடன் தொற்றுக்குரிய நெருக்கத்தில் அவர்கள் இருந்தால், அப்பாடசாலையில் திடீர் தொற்று நோய்ப் பரவல் இல்லாதிருந்தாலும்கூட அவர்கள் பாடசாலைக்கு வராமல் தடுக்கப்படுவர்.
- பாடசாலையை அடிப்படியாகக் கொண்ட நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் பதின்ம வயதினருக்காக விதந்துரைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளை வழங்க 'NSW சுகாதாரம்' பாடசாலைகளுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2018 இல், 'மானிட பப்பிலோமா வைரஸ் (HPV)' மற்றும் தொண்டை அழற்சி நோய் - ஏர்ப்பு வலி -பெர்ட்டஸ்ஸிஸ் (dTpa) தடுப்பு மருந்துகள் ஆண்டு 7 வகுப்பில் வழங்கப்படும் அதேவேளை மூளைக்காய்ச்சல் 'ACWY' தடுப்புமருந்துகள் 10 ஆம் 11 ஆம் ஆண்டு வகுப்புகளில் வழங்கப்படும்.

## மேலதிகத் தகவல்கள்

### Australian Immunisation Register

www.humanservices.gov.au/individuals/services/medicare/australian-immunisation-register

### NSW Health

www.health.nsw.gov.au/immunisation

### NSW Health 'Save the Date to Vaccinate'

www.immunisation.health.nsw.gov.au

### Australian Government Department of Health Immunise Australia Program

www.immunise.health.gov.au

## Save the Date app

SAVE THE DATE என்ற கைக்கடக்கமான கைப்பேசி பயன்பாட்டைத் தரவிறக்கம் செய்யவும் அல்லது உங்களுக்குரிய கால அட்டவணையைப் பின்வரும் வலைத்தளத்திலிருந்து பிரிண்ட் செய்து கொள்ளவும்.
**immunisation.health.nsw.gov.au**

Download on the App Store

Get it on Google play

Download on the Windows Store

மே 2018 © NSW Health.   SHPN  (HPNSW) 180294



NSW GOVERNMENT

# ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலைப் பாடசாலை நுழைவு மற்றும் நோய்த்தடுப்பு மருந்தளிப்பு

## பெற்றோருக்கான தகவல்கள்

Tamil

## 2018 ஏப்ரல் 1 முதல் பாடசாலை அனுமதியின்போது நோய்த்தடுப்பு மருந்தளிப்பு சான்றிதழொன்றை வேண்டும்படி சகல பாடசாலை அதிபர்களும் கோரப்படுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட தடுப்புமருந்தளிப்பு சான்றிதழ் வழங்கப்படாதிருந்தாலும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட முடியுமாயினும், அத்தகைய சிறுவர்கள் நோய்த்தடுப்பு மருந்து பெறாதவர்கள் எனக் கருதப்படுவதோடு இத்தடுப்பு மருந்தளிப்பினால் தவிர்க்கப்படக் கூடிய நோயொன்று பாடசாலையில் திடீரெனப் பரவுமாயின் **அல்லது** தடுப்பு மருந்தளிப்பினால் தவிர்க்கப்படக் கூடிய நோயொன்று உள்ள ஒருவருடன் தொற்றுக்குரிய நெருக்கத்தில் அத்தகைய சிறுவர்கள் இருந்தால், அப்பாடசாலையில் திடீர் தொற்று நோய்ப் பரவல் இல்லாதிருந்தாலும்கூட அவர்கள் பாடசாலைக்கு வராமல் தடுக்கப்படுவர்.

தமது பிள்ளைகளுக்குரிய சகல தடுப்பு மருந்துகளையும் அவர்கள் பெற்றுள்ளனரா என உறுதிசெய்துகொள்ளும்படியும், பாடசாலையில் சேர்க்கும்போது 'ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில்' [Australian Immunisation Register (AIR)] இருந்து பெறப்பட்ட நோய்த்தடுப்பு சான்றிதழொன்றை வழங்குமாறும் பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர், இதில் ஏதாவது ஒன்றில்:

- ஒரு AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கை (AIR Immunisation History Statement) **அல்லது**
- ஒரு AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு பத்திரம் (AIR Immunisation History Form)

## இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது ஏன்

பிள்ளைகளின் தடுப்பு மருந்தளிப்பு நிலைமை பற்றிய மிகச் சரியான தகவல்களைத் திரட்டுவதற்காகவும் பாடசாலைகளிலும் சமுதாயத்திலும் திடீர் தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த உதவவுமே இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பீட்டு ரீதியாக நோக்கும்போது இளம் சிறுவர்களைவிட வளர்ந்த சிறுவர்களில் தடுப்பு மருந்தளிப்பினால் தவிர்க்கக் கூடிய நோய்கள் அதிகரித்து வருகின்றமை பற்றிய அறிவிப்புகள் வந்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன. அத்துடன், எந்தவொரு வயதிலும் வழங்கப்பட்டுள்ள நோய்த்தடுப்புப் பதிவுகளை வைத்துள்ள ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவகத்தில் (AIR) உள்ள, வளர்ந்த சிறுவர்களின் நோய்த்தடுப்புப் பதிவுகளைப் பெற்றோர்கள் பெற்றுக் கொள்வதும் இப்போது இலகுவானதாகும்*.

* தற்போது பாடசாலைத் தடுப்பு மருந்தளிப்புத் திட்டத்தில் வழங்கப்படும் தடுப்பு மருந்தளிப்புகள் விபரம் AIR – இற்கு அனுப்பப்படுவதில்லை. 2018 இன் இறுதிப் பகுதியிலிருந்து பாடசாலை தடுப்பு மருந்தளிப்புப் பதிவுகள் AIR – இற்கு அனுப்பப்பட ஆரம்பிக்கும். பாடசாலையில் சேர்ப்பதற்கு பாடசாலை தடுப்பு மருந்தளிப்புப் பதிவுகள் அவசியப்படுவதில்லையாயினும், உங்கள் பிள்ளையின் பதிவுகளைப் பெற நீங்கள் விரும்பினால் உங்கள் உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவை 1300 066 055 – இல் தொடர்பு கொள்க.

## தடுப்பு மருந்தளிப்பு ஏன் அவசியம்

பாரதூரமான நோய்களிலிருந்து உங்கள் பிள்ளையைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழி தடுப்பு மருந்தளிப்பதாகும். உங்கள் பிள்ளைக்கு தடுப்பு மருந்தளிப்பதன் மூலம் அவர்களையும் உங்கள் சமுதாயத்திலுள்ள ஏனையோரையும், விசேடமாக, தடுப்பு மருந்தளிக்கப்பட முடியாதளவுக்கு குறைந்த வயதுடையவர்களையும் மற்றும் தடுப்பு மருந்து கொடுக்கப்படாதிருப்பதற்கான மருத்துவக் காரணங்கள் உள்ளவர்களையும், நீங்கள் பாதுகாக்கின்றீர்கள், எந்தளவுக்கு அதிகமான பிள்ளைகளுக்குத் தடுப்பு மருந்தளிக்கப்படுகிறதோ அந்தளவுக்கு அதிகமாக தவிர்க்கக் கூடிய பல பாரதூரமான நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

## AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கை

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தடுப்பு மருந்தளிப்புகளை AIR பதிவுசெய்கிறது அத்துடன் குழந்தை 4 வயதை அடைந்ததன் பின்பு AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையை பெற்றோர்களுக்கு அது அனுப்பிவைக்கும். பாடசாலையில் சேர்ப்பதற்காக இதனைப் பயன்படுத்தலாம்.

தனது பிள்ளையின் (அவர்கள் 14 வயதை அடையும் வரை) தடுப்பு மருந்து வரலாறு அறிக்கையின் (AIR Immunisation History Statement) பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ள பெற்றோர்கள் எப்போதும் பின்வரும் வழிகளில் வேண்டலாம்:

- தமது மெடிகேயர் எக்கவுண்ட் ஊடாக myGov இணைய வழியில் https://my.gov.au/ என்ற வலைத்தளத்தினூடாக
- 'மெடிகேயர் எக்ஸ்பிரஸ் பிளஸ்' என்ற பயன்பாடு (Medicare Express Plus App) மூலம் www.humanservices.gov.au/individuals/subjects/express-plus-mobile-apps
- **1800 653 809** என்ற இலக்கத்தில் AIR-இன் பொது விசாரிப்பு இணைப்பை அழைப்பதன் மூலம்

14 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகள் தமது தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையை AIR இடமிருந்து தமது சொந்த மெடிக்கேயர் ஒன்லைன் எக்கவுண்டை பயன்படுத்தி அல்லது அதனை உருவாக்கிக் கொள்வதன் மூலம் myGov இணைய வழியில் https://my.gov.au/ என்ற வலைத்தளத்தினூடாக வேண்டலாம்.

## முழுமையாக தடுப்பு மருந்தளிக்கப்பட்ட சிறுவர்கள்

NSW இல் இருக்கும் 94% இற்கும் அதிகமான பிள்ளைகள் 5 வயதில் முழுமையாக தடுப்பு மருந்தளிக்கப்படுகின்றனர் அத்துடன் அவர்களின் தடுப்பு மருந்து வரலாறு அறிக்கையின் கீழ்ப் பகுதியில் 'This child has received all vaccines required by 5 years of age' (5 வயது வரைக்கும் அவசியமான சகல தடுப்பு மருந்துகளையும் இப்பிள்ளை பெற்றுள்ளது) என்ற வாசகம் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

## மருத்துவ முரண்பாட்டு அறிகுறிகள் (contraindications) அல்லது இயற்கையான நோய்க்காப்பு உள்ள பிள்ளைகள்

மருத்துவக் காரணங்களுக்காக தடுப்பு மருந்து கொடுக்கப்பட முடியாத அல்லது இயற்கையாகவே நோய்க்காப்பு உள்ள பிள்ளைகளைப் பொறுத்தளவில், AIR மருத்துவ விலக்களிப்புப் படிவம் (AIR Medical Exemption Form) ஒன்று GP/தாதியால் பூரணப் படுத்தப்பட்டு AIR இற்கு அனுப்பப்பட்டிருந்தால் AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையில் Up to date (அப்-டு-டேட்) என்று குறிக்கப்பட்டிருக்கும். அறிக்கையின் கீப்பகுதிக்கு அருகாமையில் மருத்துவக் காரணங்களுக்கான விதிவிலக்கு அல்லது இயற்கையான நோய்க்காப்பு நிரல்படுத்தப்பட்டிருக்கும்.

## வெளிநாட்டில் தடுப்பு மருந்தளிக்கப்பட்ட பிள்ளைகள்

உங்கள் பிள்ளைக்கு வெளிநாட்டில் தடுப்பு மருந்தளிக்கப்பட்டிருந்து அது AIR இல் பதிவு செய்யப்படாதிருந்தால் பிள்ளையின் வெளிநாட்டுப் பதிவுகள் ஒரு GP/தாதி-யினால் பரிசீலிக்கப்பட்டு அத்தகவல்கள் AIR இற்கு அனுப்பப்படும். அதன்பின் பாடசாலைக்கு வழங்கப்படுவதற்காக புதுப்பிக்கப்பட்ட AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கைப் பிரதியொன்றைப் பெற்றோர்கள் கேட்டுப் பெற வேண்டும்.

## முழுமையாகத் தடுப்பு மருந்தளிக்கப்படாத பிள்ளைகள்

4 வயதாகும் வரைக்குமான விதந்துரைக்கப்பட்ட சகல தடுப்பு மருந்துகளையும் பெறாத பிள்ளைகளுக்கு அவர்களின் AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையின் கீழ்ப்பகுதியில் தவறிய தடுப்பு மருந்தளிப்புகள் மற்றும் அவை வழங்கப்பட வேண்டிய திகதிகள் நிரல்படுத்தப்பட்டிருக்கும். இப்பிள்ளைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தவறவிட்ட தடுப்புமருந்துகளைப் பெறுவதற்கான அட்டவணைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையானது ஒரு GP/தாதி-யினால் பூரணப்படுத்தப்பட்டு AIR இற்கு அனுப்பப்பட வேண்டும். பின்பு பாடசாலையில் சேர்க்கும்போது AIR தடுப்பு மருந்தளிப்பு வரலாறு அறிக்கையின் பிரதியொன்றைப் பெற்றோர்கள் பாடசாலைக்கு வழங்கலாம்.

**ஒரு தொற்று நோய்ப்பரவல் ஏற்பட்டால் தமது வயதிற்கு விதந்துரைக்கப்பட்ட தடுப்பு மருந்துகளைப் பெற்றிராத அல்லது தடுப்பு மருந்தளிப்பு சான்றிதழ் வழங்கப்படாத மாணவர்கள் வீட்டில் தங்கியிருக்க வேண்டியிருக்கலாம் என்பதை அறிந்துகொள்ளவும். இது உங்கள் பிள்ளையைப் பாதுகாக்கவும் நோய்ப் பரவலைத் தடுப்பதற்குமாகும்.**